**POP.297/2019**

**PW-1** ஈஸ்வரன்

27-09-2024 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>3, 7 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பழைய 11 வது வகுப்பு படித்துள்ளேன். அதாது Old SSLC படித்துள்ளேன். நான் காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன். ஓய்வு பெற்று 10 ஆண்டுகள் ஆகி விட்டது. இந்த மனுவை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் எனக்குத் தெரியும். எனது தகப்பனார் பெயர் யூ.பாப்பண்ணன், தாயார் பெயர் ருக்மணி. என்னுடன் பிறந்தவர்கள் முனிரத்தினம், விமலாதேவி, நான், பாக்கியலட்சுமி ஆகும். சகோதரர் முனிரத்தினம் 7 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். விமலா தேவி 9 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். பாக்கியலட்சுமி பி.ஏ. வரை படித்துள்ளார். மனுச் சொத்து எனது தகப்பனாருக்கு முழுமையாக பாத்தியப்பட்ட சொத்து. மனுச் சொத்து சம்மந்தப்பட்ட அசல் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும், அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த மனுச் சொத்து சம்மந்தப்பட்ட அசல் கிரைய ஆவணம் என்னிடம்தான் உள்ளது. அந்த கிரைய ஆவணம் எப்படி என் வசம் வந்தது என்று முந்தைய வழக்கிலும், இந்த மனுவிலும் நான் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால், சரிதான். கடந்த 9 ஆண்டுகளாக உயில் பற்றிய விவரத்தை நான் யாரிடமும் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் அந்த விவரம் தெரியும். உயிலை என்னிடம் கொடுத்ததே

என்னுடைய தாயார்தான். நான் முன்னர் தாக்கல் செய்த அ.வ.எண்.2253/2013 ல் உயிலின் விவரம் நான் தெரியப்படுத்தியுள்ளேன் என்று குறிப்பிடவில்லை என்றால், சரிதான். 2013 க்கு முன்னர் இந்த உயிலின் விவரத்தைப் பற்றி எழுத்துபூர்வமாக எந்த ஆவணங்களிலும் இல்லை என்றால், சரிதான். உயில் எவ்வாறு தயாரிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது. உயில் ஏன் பதிவு செய்யப்படவில்லை என்ற விவரமும் எனக்குத் தெரியாது. எனது தந்தை அதிகம் படிக்கவில்லை. அதனால் அவர் பதிவு செய்திருக்க மாட்டார். எனது பெற்றோர்கள் உயிரோடு இருக்கும் வரை அனைத்து குழந்தைகளையும் பிரியமாகத்தான் பார்த்து வந்தார்கள் என்றால், சரிதான். இந்த மனுச் சொத்தில்தான் திருமணம் ஆகும்வரை எனது சகோதர, சகோதரிகள் குடியிருந்து வந்தார்கள் என்று சொன்னால், சரியல்ல. நாங்கள் அனைவரும் எனது தாத்தா வீட்டில்தான் குடியிருந்தோம். ம.சா.ஆ.1 உயிலை எனது தந்தை ஏற்படுத்தவில்லை என்றும், 2013 ல் நான் வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. எனது தந்தை உண்மையாக உயிலை ஏற்படுத்தியிருந்தால் அதை 2005 லேயே அறிவித்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. 2005 வரை நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகத்தான் இருந்து வந்தோம் என்று சொன்னால் சரிதான். மனுச்சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில் ம.சா.ஆ.1 உயிலை நான் தயாரித்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. மனுச் சொத்தில் எனது சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் சம பங்கு உள்ளது என்று சொன்னால், சரியல்ல. வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

ஒம்/ஈஸ்வரன்,

Taken down by me/ typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.